வசதிகள் குறைவாக இருப்பதால் அங்கே புதியதாக கால் நடை மருத்துவமனையைத் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரமாக அது பற்றி அரசுக்கு எழுதினால் அது பற்றி ஆய்ந்து முடிவு எடுக்கப்படும்.

சென்னை மாநகராட்சி ஆணையர்.

*122—(*வினா எண். 7725)* **திரு. சு. பாலன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் அரசு சார்பாக மேலை நாடுகளில் மாநகராட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்துகொள்ள அனுப்பப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், மாநகராட்சி அபிவிருத்தித் திட்டம் ஏதாகிலும் அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்போதைய சென்னை மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு ஜூலை வரை, அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலை கழகத்தில் பொது மற்றும் அகில உலக விஷயங்களுக்கான உட்ரோ வில்சன் பள்ளியில், பார்வின் பெலோஷிப்-க்காக அனுப்பி வைக்கப்பட்டார். மாநகராட்சிகளின் நிர்வாகங்களைப் பற்றி படிப்பதற்காக அவர் அனுப்பப்படவில்லை. மேற்கூறிய படிப்பு காலம் முடிவடைந்தபின், சென்னை மாநகராட்சியின் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஏதும் ஆணையாளரால் சமர்பிக்கப்படவில்லை.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

*123—(*வினா எண். 8104)* **திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூன்று ஆண்டு பதவிக்காலம் 1984 ஆகஸ்டு திங்களுடன் முடிந்துவிட்டது என்பதும் சட்டப்படி 1984 செப்டம்பர் முதல் அந்த வாரியம் திருத்தி அமைக்கப்பட உத்தரவு வரவேண்டியது இன்னமும் வரவில்லை என்பதும் உண்மையா ?

1986 நவம்பர் 21]

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ் நாடு தொழிலாளர் நல வாரியம் 11–4–1986 அன்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9–20)

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்குப் பிறகு இந்தக் கேள்வியை அனுமதித்ததற்காக சபாநாயகருக்கு என்னுடைய நன்றி.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் ஓராண்டுக்குப் பின்னால் அனுமதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் இந்தக் குழு இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே உருவாக்கப்பட்டு அதிலிருந்து செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன்பே குழு வந்துவிட்டது. கேள்விக்கான விடை எட்டு மாதங்களுக்கு முன்பே வந்துவிட்டது. இருந்தாலும் தகவலுக்காக இப்போது சொல்லப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயிலில்
ஆக்கிரமிப்புகளில் உள்ள குடியிருப்புகள், கடைகள்.

124—(*வினா எண். 9122) திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் நகரத்தில் நகர எல்லைக்குட்பட்ட இடங்களில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள், வியாபார கடைகள் முறையே எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) இவைகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் நகரத்தில் நகர எல்லைக்குட்பட்ட பஞ்சாயத்து சாலைகளில் 3 குடியிருப்புகளும், 29 கடைகளும், 3 சார்பு கொட்டகைகளும் (ஆக 35) ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.